# கொடுப்பனவுகள் மற்றும் கட்டணக் கொள்கையின் அமைப்பு

## 14.A அறிமுகம்

14.A.1 குறைபாடுகள் உள்ள குழந்தைகள் மற்றும் நடக்க தொடங்கும் குழந்தைகளுக்காக ஒரு விரிவான, ஒருங்கிணைந்த, உள்-முகவர் சேவை அமைப்பாக இருக்க, குறைபாடுடைய தனிநபர் கல்வி சட்டம் (IDEA) பகுதி C ஆனது காங்கிரஸ் மூலம் வடிவமைக்கப்பட்டது. இந்த மக்கள்தொகைக்கு சேவை செய்ய ஏற்கனவே திட்டங்கள் உள்ளதை காங்கிரஸ் அங்கீகரித்தது, மேலும் இந்த திட்டங்கள் எல்லாம் ஒருங்கிணைக்கும் உள்கட்டமைப்பை வழங்குவதற்காக பகுதி C வடிவமைக்கப்பட்டது. இதன் விளைவாக, பகுதி C -க்கான நிதி பொது மற்றும் தனியார் காப்பீடு உள்ளிட்ட மத்திய, மாநில மற்றும் உள்ளூர் நிதி ஆதாரங்களைப் பயன்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டது. அனைத்து ஆரம்ப தலையீடு செலவுகளையும் ஈடுகட்ட போதுமான பொது நிதி இல்லாத காரணத்தால், அனைத்து ஆரம்ப தலையீடு சேவைகளையும் பொது செலவில் வழங்க முடியாது. குடும்பங்கள் தங்கள் குழந்தையின் திட்டத்திற்காக நிதி ரீதியாக பங்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ESIT-இன் குடும்ப செலவு பங்கேற்பு தேவைகளுக்கு உட்பட்ட அந்த ஆரம்ப தலையீடு சேவைகளுக்காக தனியார் உடல்நல பராமரிப்பு/காப்பீடு மற்றும் குழந்தைகளுக்கான ஆப்பிள் ஹெல்த்/மெடிகெய்டு ஆகியவற்றை அணுகுவதன் மூலம் இந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய முடியும்.

14.A.2 இந்த வளங்கள் அனைத்தையும் அதிகபட்சமாக பயன்படுத்தி, அதிக எண்ணிக்கையில் குறைபாடுகள் உள்ள குழந்தைகள் மற்றும் நடக்க தொடங்கும் குழந்தைகளுக்கும் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கும் சேவை செய்வதே, குழந்தைகள் மற்றும் நடக்க தொடங்கும் குழந்தைகளுக்கான ஆரம்பகால ஆதரவு திட்டத்தின் (ESIT) கடமையாக உள்ளது. குழந்தைக்கு மேம்பாட்டு நன்மைகளை தர போதுமான ஆரம்ப தலையீடு சேவைகளை வழங்க இந்த வளங்கள் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதும் ESIT-இன் கடமையாக உள்ளது. ESIT அதன் பரந்த தகுதி அளவுகோல்களைப் பராமரிக்க வேண்டுமென்றால், பொது காப்பீடு, தனியார் காப்பீடு மற்றும் கட்டணங்கள் உட்பட கிடைக்கக்கூடிய அனைத்து நிதி ஆதாரங்களையும் பயன்படுத்துவது அவசியம்.




## தொடர்பு:

**The Washington State Department of Children, Youth & Families Early Support for Infants and Toddlers Program**
P.O. Box 40970
Olympia, WA 98504-0970
இலவச எண்: 1-866-482-4325
**www.dcyf.wa.gov**


இந்த ஆவணத்தின் நகல்களை மாற்று வடிவத்தில் அல்லது மொழியில் நீங்கள் பெற விரும்பினால், தொடர்பு கொள்ளவும் *DCYF Constituent Relations (1-800-723-4831 | 360-902-8060, **ConstRelations@dcyf.wa.gov**).*


DCYF PUBLICATION FS_0033 | DEL 11-019 TM (01-2020) Tamil

14.A.3 ஒரு குழந்தை அல்லது குழந்தையின் குடும்பத்திற்கு பொருத்தமான ஆரம்ப தலையீடு சேவைகளை சரியான நேரத்தில் ஏற்பாடு செய்வதில் உள்ள தாமதத்தைத் தடுப்பதற்காக தேவைப்பட்டால், அங்கீகரிக்கப்பட்ட சேவைகள் மற்றும் செயல்பாடுகளை வழங்கும் வழங்குநருக்கு தருவதற்காக, IDEA-இன் பகுதி C இன் கீழ் உள்ள நிதியை ESIT பயன்படுத்தலாம் (34 CFR §303.16-இல் வரையறுக்கப்பட்ட உடல்நல சேவைகள் உட்பட, [ஆனால் மருத்துவ சேவைகள் இல்லை] 34 CFR §§303.115-லிருந்து 303.117 வரை மற்றும் §§303.301-லிருந்து 303.320 வரையில் விவரிக்கப்பட்ட குழந்தை கண்டறியும் அமைப்பின் செயல்பாடுகள், மற்றும் §303.321-இல் உள்ள மதிப்பீடுகள் மற்றும் மதிப்பாய்வுகள்), இறுதிப் பொறுப்பைக் கொண்ட முகமை அல்லது நிறுவனத்திலிருந்து செலவீடு திரும்பி வருவது நிலுவையில் இருக்கும்போது இவ்வாறு செய்யலாம்.

## 14.B கொள்கை

### 14.B.1 பொது செலவில் வழங்கப்படும் செயல்பாடுகள் மற்றும் சேவைகள்

(a) 4 CFR§303.521 ((b) (2011)-க்கு இணங்க, பின்வரும் IDEA, பகுதி C செயல்பாடுகள் மற்றும் சேவைகளானது பொது செலவில் குழந்தைகள் மற்றும் நடக்க தொடங்கும் குழந்தைகளுக்கான ஆரம்ப ஆதரவு (ESIT) மற்றும் அதன் சேவை வழங்குநர்கள் மூலம் வழங்கப்பட வேண்டும், அதற்காக எந்த கட்டணத்தையும் குடும்பங்களிடம் இருந்து வசூலிக்க கூடாது:

(1) §§303.301 முதல் 303.303 வரை உள்ள குழந்தை கண்டறிதல் தேவைகளை செயல்படுத்துதல்.

(2) மதிப்பீடு மற்றும் மதிப்பாய்வு, §303.320-க்கு இணங்க, மற்றும் §303.13 (b)-இல் உள்ள மதிப்பீடு மற்றும் மதிப்பாய்வு தொடர்பான செயல்பாடுகள்.

(3) §§303.13 (b)(11) மற்றும் 303.33 இல் வரையறுக்கப்பட்ட சேவை ஒருங்கிணைப்பு சேவைகள் (குடும்ப வள ஒருங்கிணைப்பு).

(4) பின்வருவது தொடர்பான நிர்வாக மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்—

(i) §§303.342 முதல் 303.345 வரையுள்ளதற்கு இணங்க IFSP- கள் மற்றும் இடைக்கால IFSP-களின் வளர்ச்சி, மதிப்பாய்வு மற்றும் மதிப்பீடு; மற்றும்

(ii) துணைப்பகுதி E, நடைமுறை நலக்காப்புகள், மற்றும் 34 CFR §303-இன் துணைப்பகுதி D-யில் உள்ள ஆரம்பகால தலையீடு சேவைகளின் மாநிலம் தழுவிய அமைப்பின் பிற கூறுகளை செயல்படுத்துதல்.

(b) **உத்தரவாதம்:** 34 CFR§303.521 (a)(4)(ii)-க்கு இணங்க, ஒரு குடும்பம் "பணம் செலுத்தும் இயலாமை" என்ற வரையறையை பூர்த்தி செய்தால், அவர்கள் குழந்தையின் IFSP-இல் அடையாளம் காணப்பட்ட அனைத்து பகுதி C சேவைகளும் எந்த செலவும் இல்லாமல் குடும்பத்திற்கு வழங்கப்படும். கூடுதலாக, குடும்பத்தின் பணம் செலுத்தும் இயலாமை பகுதி C சேவைகளை வழங்குவதில் தாமதம் அல்லது மறுப்பை ஏற்படுத்தாது.

### 14.B.2 குடும்ப செலவு பங்கேற்புக்கு (FCP) உட்பட்ட செயல்பாடுகள் மற்றும் சேவைகள்

(a) 34 CFR§303.521 (b)-க்கு இணங்க, பின்வரும் செயல்பாடுகள் மற்றும் சேவைகள் குடும்ப செலவு பங்கேற்புக்கு உட்பட்டவை, அதற்காக இணை-கொடுப்பனவுகள், இணை-காப்பீடு, விலக்குகள் அல்லது கட்டணம் குடும்பங்களிடமிருந்து வசூலிக்கப்படலாம்:

(1) உதவி தொழில்நுட்ப சாதனம்

(2) உதவி தொழில்நுட்ப சேவை

(3) கேட்டலியல் சேவைகள்

(4) ஆலோசனை

(5) உடல்நல சேவைகள்

(6) செவிலியர் சேவைகள்

(7) ஊட்டச்சத்து சேவைகள்

(8) தொழில் சார்ந்த சிகிச்சை

(9) உடல்ரீதியான சிகிச்சை
(10) உளவியல் சேவைகள்
(11) சமூக பணி சேவைகள்
(12) பேச்சு-மொழி நோயியல் சேவைகள்

(b) **உத்தரவாதம்:** 34 CFR §303.521 (a)(4)(iii) க்கு இணங்க, குடும்ப செலவு பங்கேற்புக்கு உட்பட்ட பகுதி C ஆரம்ப தலையீடு சேவைக்கான உண்மையான செலவை விட அதிகமாக குடும்பங்களிடம் இருந்து கட்டணம் வசூலிக்கப்படாது (அந்த சேவை கட்டணத்திற்காக ஒதுக்கப்பட்ட பிற நிதி மூலங்களிலிருந்து பெறப்பட்ட எந்தவொரு தொகையையும் கருதிய பிறகு).

**14.B.3 நிதி ஆதாரங்கள் குடும்ப செலவு பங்கேற்புக்கு உட்பட்டு ஆரம்பகால தலையீடு சேவைகளுக்கான வாஷிங்டனின் கொடுப்பனவுகள் மற்றும் கட்டணங்களுடன் இணைக்கப்பட்டுள்ளவை**

பணம் செலுத்தும் இயலாமை இருப்பதாக தீர்மானிக்கப்படாவிட்டால், குடும்ப செலவு பங்கேற்புக்கு உட்பட்ட சேவைகளைப் பெறும் அனைத்து குடும்பங்களும் தங்கள் பொது காப்பீட்டு நன்மைகள், தனியார் காப்பீட்டு நன்மைகளை பயன்படுத்தி அல்லது ஒரு கட்டணத்தை செலுத்துவதன் மூலம் தங்கள் குழந்தையின் சேவைகளுக்கு நிதி ரீதியாக பங்களிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.. இதன் விளைவாக, பின்வரும் நிதி ஆதாரங்கள் ESIT-இன் கொடுப்பனவுகள் மற்றும் கட்டணக் கொள்கை அமைப்பில் இணைக்கப்பட்டுள்ளன:

(a) பொது உடல்நலப் பாதுகாப்பு/காப்பீடு (குழந்தைகளுக்கான ஆப்பிள் ஹெல்த்/மெடிகெய்டு)
(b) தனியார் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீடு
(c) கட்டணம்

**14.B.4 குடும்ப வருமானம் மற்றும் செலவு தகவல்**

(a) பொது அல்லது தனியார் காப்பீட்டை கணக்கீடு செய்வதற்கு முன்பு, குடும்பங்களுக்கு கொடுப்பனவு மற்றும் கட்டணக் கொள்கையின் ESIT அமைப்பு வழங்கப்படும். பொருந்துகிற மாதிரி, முன் எழுதப்பட்ட அறிவிப்பு, பொது மற்றும்/அல்லது தனியார் காப்பீட்டை அணுகுவதற்கான ஒப்புதல், மற்றும் வருமான மற்றும் செலவு சரிபார்ப்பு படிவத்தை பூர்த்தி செய்யுமாறு குடும்பங்களிடம் கேட்கப்படும்.

(b) குடும்பத்தின் குடும்ப வள ஒருங்கிணைப்பாளர் (FRC), பொருந்துகிற மாதிரி, முன் எழுதப்பட்ட அறிவிப்பு, பொது மற்றும்/அல்லது தனியார் காப்பீட்டை அணுகுவதற்கான ஒப்புதல், மற்றும் வருமான மற்றும் செலவு சரிபார்ப்பு படிவத்தை மதிப்பாய்வு செய்து பூர்த்தி செய்ய குடும்பங்களுக்கு உதவுவார்.

(c) முன் எழுதப்பட்ட அறிவிப்பு, பொது மற்றும்/அல்லது தனியார் காப்பீட்டை அணுகுவதற்கான ஒப்புதல், மற்றும் வருமானம் மற்றும் செலவு சரிபார்ப்பு படிவமும் குடும்பத்திற்காக ஒதுக்கப்பட்ட FRC-டம் சமர்ப்பிக்கப்படும்.

(d) குடும்ப வருமானம் மற்றும் செலவுத் தகவலில் குடும்ப அளவின் அடிப்படையில் சரிசெய்யப்பட்ட வருடாந்திர வருமானம் பெடரல் வறுமை நிலை (FPL)இல் 200%-ற்கு கீழே இருந்தால், அந்த குடும்பம் காப்பீட்டு இணை-கொடுப்பனவுகள், இணை-காப்பீடு, காப்பீட்டு விலக்குகள் அல்லது மாத கட்டணத்தை செலுத்த தேவையில்லை. இந்த செலவுகளுக்காக மற்ற முகமை நிதிகளை அல்லது வேறுவழியில்லாவிட்டால் கடைசியாக பகுதி C நிதிகளை பயன்படுத்தலாம்.

(e) குடும்ப வருமானம் மற்றும் செலவுத் தகவலில் குடும்ப அளவின் அடிப்படையில் சரிசெய்யப்பட்ட வருடாந்திர வருமானம் பெடரல் வறுமை நிலை (FPL) இல் 200%-ற்கு மேலே இருந்தால், பொருந்தினால், அந்த குடும்பம் காப்பீட்டு இணை-கொடுப்பனவுகள், இணை-காப்பீடு, காப்பீட்டு விலக்குகள் அல்லது மாத கட்டணத்தை செலுத்த தேவை.

14.B.5 **பொது உடல்நலப் பாதுகாப்பு/காப்பீடின் பயன்பாடு (குழந்தைகளுக்கான ஆப்பிள் ஹெல்த் / மெடிகெய்டு)**

(a) 34 CFR§303.520(a)(2)(i)-க்கு இணங்க, ESIT ஆரம்ப தலையீடு திட்டத்தில் சேர்ந்துள்ள குடும்பங்கள், அவர்கள் குழந்தைக்காக பகுதி C ஆரம்ப தலையீடு சேவைகளைப் பெறுவதற்கான நிபந்தனையாக, குழந்தைகளுக்கான ஆப்பிள் ஹெல்த்/மெடிகெய்டில் பதிவு செய்யவோ அல்லது சேரவோ தேவையில்லை.

(b) 34 CFR§303.520(a)(3)-க்கு இணங்க, பகுதி C சேவைகளுக்கு பணம் செலுத்துவதற்காக ஒரு குழந்தை அல்லது பெற்றோரின் பொது நன்மைகள் அல்லது காப்பீட்டைப் பயன்படுத்துவதற்கு முன்பு குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள் மற்றும் கட்டணக் கொள்கையின் ESIT அமைப்பு வழங்கப்படும்.

(c) 34 CFR§303.520(a)(2)(ii)-க்கு இணங்க, குழந்தைகளுக்கான ஆப்பிள் ஹெல்த்/மெடிகெய்டை அணுகுவது பின்வருவனவற்றில் ஏதாவது விளைவை ஏற்படுத்தினால், ஆரம்பகால தலையீடு வழங்குநர்கள் குடும்ப ஒப்புதலை பெறுவார்கள்:

(1) கிடைக்கக்கூடிய வாழ்நாள் பாதுகாப்பு அல்லது அந்த திட்டத்தின் கீழ் குழந்தை அல்லது பெற்றோருக்கு காப்பீடு செய்யப்பட்ட வேறு எந்த நன்மையாவது குறைவது;

(2) பொது நன்மைகள் அல்லது காப்பீட்டுத் திட்டம் மூலம் பணம் செலுத்தப்படும் சேவைகளுக்காக குழந்தையின் பெற்றோர் பணம் செலுத்தவேண்டிய விளைவு;

(3) பிரீமியங்களில் ஏதேனும் அதிகரிப்பு அல்லது குழந்தை அல்லது பெற்றோர்களுக்கான பொது நன்மைகள் அல்லது காப்பீடு நிறுத்தப்படுதல்; அல்லது

(4) ஒட்டுமொத்த உடல்நலம்-தொடர்பான செலவினங்களின் அடிப்படையில் வீடு மற்றும் சமூக அடிப்படையிலான தள்ளுபடிகளுக்கான தகுதியை குழந்தை அல்லது குழந்தையின் பெற்றோரோ இழக்கும் அபாயம்.

(d) 34 CFR §303.520(b)(1)-க்கு இணங்க, குடும்பங்களிடம் குழந்தைகளுக்கான ஆப்பிள் ஹெல்த்/மெடிகெய்டு மற்றும் தனியார் காப்பீடு இரண்டும் இருக்கும்போது, ஆரம்பகால தலையீடு வழங்குநர்கள் பின்வருவதற்காக பெற்றோரின் ஒப்புதலைப் பெற வேண்டும்:

(1) IFSP-இல் உள்ள ஆரம்ப தலையீடு சேவைகளின் ஆரம்ப ஏற்பாட்டிற்கு பணம் செலுத்த குடும்பத்தின் தனியார் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீட்டின் பயன்பாடு;

(2) குழந்தையின் IFSP-இல் அதிர்வெண், நீளம், காலம் அல்லது சேவைகளின் தீவிரம் ஆகியவை அதிகரிக்கும் போது பணம் செலுத்த தனியார் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீட்டின் பயன்பாடு.

(e) **உத்தரவாதம்:** 34 CFR §303.521(a)(4)(iv)-க்கு இணங்க, பொது காப்பீடு அல்லது நன்மைகள் அல்லது தனியார் காப்பீடு இல்லாத குடும்பங்களை விட பொது காப்பீடு அல்லது நன்மைகள் உள்ள குடும்பங்களிடம் பொருத்தமற்றதாக கட்டணம் வசூலிக்கப்படாது.

(f) ஆரம்ப தலையீடு வழங்குநர்கள் செய்பவை:

(1) 34 CFR §§303.414 மற்றும் 303.520(a)(3)(i)க்கு இணங்க, குழந்தைகளுக்கான ஆப்பிள் ஹெல்த்/மெடிகெய்டில் சேர்ந்த குடும்பங்களிடம், அவர்கள் குழந்தைக்கு வழங்கப்படும் ஆரம்ப தலையீடு சேவைகளை பில்லிங் செய்வதற்காக, அவர்களை தனிப்பட்ட முறையில் அடையாளம் காணக்கூடிய தகவல்கள் குழந்தைகளுக்கான ஆப்பிள் ஹெல்த்/மெடிகெய்டிடம் வெளிப்படுத்தப்படும் என்பதை தெரிவிக்கும் எழுத்துப்பூர்வ அறிவிப்பை வழங்குவார்.

(2) 34 CFR §303.520(a)(3)(iii)-க்கு இணங்க, எந்த நேரத்திலும் பில்லிங் நோக்கங்களுக்காக தனிப்பட்ட முறையில் அடையாளம் காணக்கூடிய தகவல்களை வெளிப்படுத்துவதற்கான ஒப்புதலை திரும்பப் பெற அவர்களுக்கு உரிமை உண்டு என்பதை குடும்பங்களுக்கு தெரிவிப்பார்.

(3) 34 CFR §303.520(a)(3)(iv)-க்கு இணங்க, குழந்தைகளுக்கான ஆப்பிள் ஹெல்த்/மெடிகெய்டு பயன்பாட்டின் விளைவாக, குடும்பத்திற்கு ஏற்படக்கூடிய பொது வகை செலவுகளின் எழுத்துப்பூர்வ அறிக்கையை வழங்குவார்.

(g) ஆரம்பகால தலையீடு வழங்குநர்கள் குழந்தைகளுக்கான ஆப்பிள் ஹெல்த்/மெடிகெய்டு பிரீமியங்களை செலுத்த மாட்டார்கள்.

(h) 34 CFR §303.520(a)(2)(iii)-க்கு இணங்க, குழந்தைகளுக்கான ஆப்பிள் ஹெல்த்/மெடிகெய்டில் சேர அல்லது அணுகுவதற்கு பெற்றோர் ஒப்புதல் அளிக்காவிட்டாலும், ஆரம்ப தலையீடு வழங்குநர்கள், பெற்றோர் ஒப்புதல் அளித்த IFSP-ற்காக, பகுதி C-இன் ஆரம்ப தலையீடு சேவைகளை அவர்களுக்கு கிடைக்கச்செய்ய வேண்டும். குழந்தைகளுக்கான ஆப்பிள் ஹெல்த்/மெடிகெய்டை பயன்படுத்துவதற்கான ஒப்புதல் இல்லாததை, இந்த பகுதியின் கீழ் குழந்தை அல்லது குடும்பத்திற்கு எந்தவொரு சேவையையும் வழங்குவதை தாமதப்படுத்தவோ அல்லது மறுக்கவோ பயன்படுத்தப்படாது.

(i) குழந்தைகளுக்கான ஆப்பிள் ஹெல்த்/மெடிகெய்டு தகுதியை உறுதிப்படுத்த முடியாவிட்டால் அல்லது குடும்பம் வருமானம் மற்றும் செலவுத் தகவல்களை வழங்க மறுத்துவிட்டால், குடும்பம் வாஷிங்டனின் கொடுப்பனவு மற்றும் கட்டணக் கொள்கையை பின்பற்றியாக வேண்டும்.

### 14.B.6 தனியார் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீட்டின் பயன்பாடு

(a) 34 CFR §303.520(b)(1)(iii)-க்கு இணங்க, பகுதி C சேவைகளுக்கு பணம் செலுத்த ஒரு குழந்தை அல்லது பெற்றோரின் தனியார் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீட்டைப் பயன்படுத்துவதற்கு முன்பு, குடும்பங்களுக்கு கொடுப்பனவு மற்றும் கட்டணக் கொள்கையின் ESIT அமைப்பு வழங்கப்படும்.

(b) 34 CFR §303.520(b)(1)(i)-க்கு இணங்க, ஆரம்ப தலையீடு வழங்குநர்கள் பெற்றோரின் ஒப்புதலை பின்வருவதற்காக பெற வேண்டும்:

(1) IFSP-இல் உள்ள ஆரம்ப தலையீடு சேவைகளின் ஆரம்ப ஏற்பாட்டிற்கு பணம் செலுத்த குடும்பத்தின் தனியார் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீட்டின் பயன்பாடு;

(2) குழந்தையின் IFSP-இல் அதிர்வெண், நீளம், காலம் அல்லது சேவைகளின் தீவிரம் ஆகியவற்றில் ஏதாவது அதிகரிக்கும் போது பணம் செலுத்த தனியார் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீட்டின் பயன்பாடு.

(c) **உத்தரவாதம்:** 4 CFR §303.521(a)(4)(iv)-க்கு இணங்க, பொது காப்பீடு அல்லது நன்மைகள் அல்லது தனியார் காப்பீடு இல்லாத குடும்பங்களிடம் பொருத்தமற்றதாக கட்டணம் வசூலிக்கப்படாது.

(d) 34 CFR §303.520(b)(1)(ii)-க்கு இணங்க, ஆரம்பகால தலையீடு வழங்குநர்கள் தனியார் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீட்டின் பயன்பாட்டின் விளைவாக குடும்பத்திற்கு ஏற்படக்கூடிய பின்வருவது போன்ற, பொது வகை செலவுகளின் எழுத்துப்பூர்வ அறிக்கையை வழங்குவார்கள்:

(1) குழந்தை, பெற்றோர் அல்லது குழந்தையின் குடும்ப உறுப்பினர்களுக்கான காப்பீட்டுக் கொள்கையின் கீழ் வருடாந்திர அல்லது வாழ்நாள் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீட்டின் உச்ச வரம்புகள் காரணமாக நன்மைகளை இழப்பது போன்ற இணை-கொடுப்பனவுகள், இணை-காப்பீடு, பிரீமியங்கள் அல்லது விலக்குகள் அல்லது பிற நீண்ட கால செலவுகள்;

(2) குடும்பத்தின் தனியார் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீட்டின் பயன்பாடானது, கொள்கையின் கீழ் பாதுகாக்கப்படும் குறைபாடுள்ள குழந்தை, பெற்றோர் அல்லது குழந்தையின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோருக்கு உடல்நல காப்பீடு கிடைப்பதை எதிர்மறையாக பாதிப்பதற்கான சாத்தியம்; மற்றும் பகுதி C ஆரம்ப தலையீடு சேவைகளுக்காக பணம் செலுத்துவதற்காக காப்பீட்டுக் கொள்கையைப் பயன்படுத்துவதால் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீடு நிறுத்தப்படலாம்; அல்லது

(3) ஆரம்பகால தலையீடு சேவைகளுக்கு பணம் செலுத்துவதற்காக தனியார் காப்பீட்டை பயன்படுத்துவதால் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீட்டு பிரீமியங்கள் பாதிக்கப்படக்கூடிய சாத்தியம்.

(e) ஆரம்பகால தலையீடு வழங்குநர்கள் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீட்டுக்கான பிரீமியங்களை செலுத்த மாட்டார்கள்.

(f) 34 CFR §303.520(a)(2)(iii)-க்கு இணங்க, தனியார் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீட்டை அணுக பெற்றோர் ஒப்புதல் அளிக்காவிட்டாலும், பெற்றோர் ஒப்புதல் அளித்த IFSP மீது, ஆரம்ப தலையீடு வழங்குநர்கள் பகுதி C ஆரம்ப தலையீடு சேவைகளை கிடைக்க செய்யவேண்டும். ஒப்புதல் இல்லாததை குழந்தை அல்லது குடும்பத்திற்கு எந்தவொரு சேவையையும் தாமதப்படுத்தவோ அல்லது மறுக்கவோ பயன்படுத்தப்படாது. பெற்றோர் அல்லது குடும்பத்தினர் தங்கள் தனியார் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீட்டை அணுக ஒப்புதல் அளிக்காதபோது, குடும்பம் வாஷிங்டனின் கொடுப்பனவு மற்றும் கட்டணக் கொள்கையை பின்பற்ற தேவை.

(g) இணை-கொடுப்பனவுகள், இணை-காப்பீடு அல்லது விலக்குகள் விதிக்கப்பட்டுள்ள அனைத்து குடும்பங்களுக்கும், வேறு வழியில்லாதபோது கடைசியாக பகுதி C மூலம் கட்டுவது உட்பட பிற முகமை நிதிகளை இந்த செலவுகளை ஈடுகட்ட பயன்படுத்தலாம்.

(h) இணை-கொடுப்பனவுகள், இணை-காப்பீடு அல்லது விலக்குகளை செலுத்துவதில் 90 நாட்கள் தாமதித்து தவறு செய்த குடும்பங்கள் பெறும் சேவைகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய கட்டணத் திட்டம் உருவாக்கப்படும் வரை குடும்ப செலவு பங்கேற்பு இடைநிறுத்தத்திற்கு உட்படும். குடும்பம், குடும்ப வள ஒருங்கிணைப்பாளர் மற்றும் சேவை வழங்குநர்(கள்) ஆகியோருக்கு எழுத்துப்பூர்வ அறிவிப்பு வழங்கப்பட்ட பின்னர் இது நடக்கும்.

### 14.B.7 பெற்றோரின் பணம் செலுத்தும் இயலாமையின் வரையறை

ESIT இன் வரையறை படி **பணம் செலுத்தும் இயலாமை** என்பது 10% ஐத் தாண்டியுள்ள அனுமதிக்கப்பட்ட திரும்ப பெற இயலாத செலவுகள் சரிசெய்யப்பட்ட பிறகும், பெடரல் வறுமை நிலை (FPL)-இல் 200%-இன் கீழே ஒரு குடும்பத்தின் முழு வருடாந்திர வருமானம் இருப்பதை குறிக்கிறது,

(a) ஒரு குடும்பத்தின் மாதாந்திர கட்டணம் செலுத்தும் திறனை தீர்மானிக்க வருமானம் மற்றும் செலவுத் தகவல் தேவை.

(b) அனுமதிக்கப்பட்ட திரும்ப பெற இயலாத செலவுகள் பின்வருமாறு: பிரீமியங்கள், விலக்குகள், இணை கொடுப்பனவுகள் மற்றும் இணை-காப்பீடு உள்ளிட்ட மருத்துவ மற்றும் பல்லிற்கான செலவுகள்

   (1) பிரீமியங்கள், விலக்குகள், இணை-கொடுப்பனவுகள் மற்றும் இணை-காப்பீடு உள்ளிட்ட மருத்துவ மற்றும் பல்லிற்கான செலவுகள்
   
   (2) மனநல சிகிச்சை காப்பீட்டில் சேர்க்கப்படவில்லை
   
   (3) உரிமம் பெற்ற வீட்டு உடல்நல முகமை மூலம் வழங்கப்படும் வீட்டு உடல்நல பராமரிப்பு
   
   (4) குழந்தை ஆதரவு/ஜீவனாம்ச கொடுப்பனவுகள்
   
   (5) பெற்றோர்(கள்) வேலைக்கு செய்வதால் அல்லது பள்ளி செல்வதனால் ஏற்படும் குழந்தைகளின் பராமரிப்பு செலவுகள்.

(c) பொது உடல்நலப் பாதுகாப்பு/காப்பீடு அல்லது தனியார் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீட்டை பில்லிங் செய்வதற்கு முன்பு, முன் எழுதப்பட்ட அறிவிப்பு, பொது மற்றும்/அல்லது தனியார் காப்பீட்டை அணுகுவதற்கான ஒப்புதல், மற்றும் வருமான மற்றும் செலவு சரிபார்ப்பு படிவத்தை பூர்த்தி செய்யுமாறு குடும்பங்களிடம் கேட்கப்படும். அதில் பின்வருவது அடங்கும்:

   (1) வருமானம் மற்றும் செலவு பற்றிய தகவல்;
   
   (2) தனிப்பட்ட அடையாள எண்ணை வெளிப்படுத்துவதற்கான ஒப்புதல்; மேலும்,
   
   (3) பொது அல்லது தனியார் காப்பீட்டு பாதுகாப்பிற்கான ஒப்புதல்.

(d) குடும்பத்தின் பணம் செலுத்தும் திறன் வருடத்திற்கு ஒருமுறை அல்லது அந்த குடும்பம் கோரிக்கை வைத்ததுமே சரி பார்த்து புதுப்பிக்கப்பட வேண்டும்.

### 14.B.8 பெற்றோரின் பணம் செலுத்தும் இயலாமையின் வரையறை

ESIT இன் வரையறை படி **பணம் செலுத்தும் இயலாமை** என்பது 10% ஐத் தாண்டியுள்ள அனுமதிக்கப்பட்ட திரும்ப பெற இயலாத செலவுகள் சரிசெய்யப்பட்ட பிறகும், பெடரல் வறுமை நிலை (FPL)-இல் 200%-இன் கீழே ஒரு குடும்பத்தின் முழு வருடாந்திர வருமானம் இருப்பதை குறிக்கிறது.

(a) ஒரு குடும்பத்தின் பணம் செலுத்தும் இயலாமையை கணக்கிட வருமானம் மற்றும் செலவு விவரங்கள் தேவை.

(b) அனுமதிக்கக்கூடிய திரும்ப பெற இயலாத செலவுகளில் அடங்குவது:

(1) பிரீமியங்கள், விலக்குகள், இணை-கொடுப்பனவுகள் மற்றும் இணை-காப்பீடு உள்ளிட்ட மருத்துவ மற்றும் பல்லிற்கான செலவுகள்

(2) மனநல சிகிச்சை காப்பீட்டில் சேர்க்கப்படவில்லை

(3) உரிமம் பெற்ற வீட்டு உடல்நல முகமை மூலம் வழங்கப்படும் வீட்டு உடல்நல பராமரிப்பு

(4) குழந்தை ஆதரவு/ஜீவனாம்ச கொடுப்பனவுகள்

(5) பெற்றோர்(கள்) வேலை செய்வதால் அல்லது பள்ளி செல்வதனால் ஏற்படும் குழந்தைகளின் பராமரிப்பு செலவுகள்.

(c) பொது உடல்நலப் பாதுகாப்பு/காப்பீடு அல்லது தனியார் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீட்டிற்காக பில்லிங் செய்வதற்கு முன்பு, முன் எழுதப்பட்ட அறிவிப்பு, பொது மற்றும்/அல்லது தனியார் காப்பீட்டை அணுகுவதற்கான ஒப்புதல், மற்றும் வருமான மற்றும் செலவு சரிபார்ப்பு படிவத்தை பூர்த்தி செய்யுமாறு குடும்பங்களிடம் கேட்கப்படும். அதில் பின்வருவது அடங்கும்:

(1) வருமானம் மற்றும் செலவு பற்றிய தகவல்;

(2) தனிப்பட்ட அடையாள எண்ணை வெளிப்படுத்துவதற்கான அனுமதி; மேலும்,

(3) பொது அல்லது தனியார் காப்பீட்டு பாதுகாப்பிற்கான அனுமதி.

(d) குடும்பத்தின் பணம் செலுத்தும் திறன் வருடத்திற்கு ஒருமுறை அல்லது அந்த குடும்பம் கோரிக்கை வைத்த உடனேயே சரி பார்த்து புதுப்பிக்கப்பட வேண்டும்.

### 14.B.9 கட்டணம்

(a) 34 CFR §303.521 க்கு இணங்க, "பணம் செலுத்தும் திறன்" இருப்பதாக தீர்மானிக்கப்பட்ட குடும்பங்களுக்காக, பின்வருவனவற்றில் ஏதேனும் நிகழும்போது குடும்ப செலவு பங்கேற்புக்கு உட்பட்ட ஆரம்ப தலையீடு சேவைகளுக்கான மாதாந்திர கட்டணத்தை ESIT நிலைநாட்டியுள்ளது:

(1) குடும்பம் தனியார் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீட்டை உபயோகப்படுத்த மறுக்கிறது.

(2) குழந்தைகளுக்கான ஆப்பிள் ஹெல்த்/மெடிகெய்ட் பொது உடல்நலப் பாதுகாப்பு/காப்பீட்டுக்கான பயன்பாட்டை குடும்பம் மறுக்கிறது மற்றும் அவர்களது சரிசெய்யப்பட்ட ஆண்டு வருமானம் 200% FPL-ஆக அல்லது அதற்கு மேல் உள்ளது; அல்லது

(3) குடும்பத்திடம் குழந்தைகளுக்கான ஆப்பிள் ஹெல்த்/மெடிகெய்ட் அல்லது தனியார் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீடு இல்லை.

(b) வருமானம் மற்றும் செலவுத் தகவல்களை வழங்க மறுக்கும் குடும்பங்களுக்கு, அந்த சேவைகளுக்கான கட்டணத்தை செலுத்துவதற்காக பிற பொது ஆதாரங்களில் இருந்து பெறப்பட்ட எந்தவொரு தொகையையும் கருதிய பிறகு, குடும்ப அளவின் அடிப்படையில் மிக உயர்ந்த மட்ட மாதாந்திர கட்டணம் வசூலிக்கப்படும்.

(c) பெடரல் வறுமை நிலை (FPL) இன் விதிகளின் படி மாதாந்திர கட்டண அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது மேலும் அது வருடாந்திர அடிப்படையில் புதுப்பிக்கப்படும்.

(d) குடும்ப செலவு பங்கேற்புக்கு உட்பட்ட ஆரம்ப தலையீடு சேவைகளை பெறுவதற்காக குடும்பங்கள் தங்கள் பொது மற்றும்/அல்லது தனியார் காப்பீட்டை அணுக ஒப்புதல் அளித்தால், அவர்கள் மாதாந்திர கட்டணம் செலுத்த தேவையில்லை.

(e) குழந்தைகளுக்கான ஆப்பிள் ஹெல்த்/மெடிகெய்டு காப்பீடில் சேர்ந்த குடும்பங்கள், “செலுத்தும் இயலாமை” என்ற வரையறையின் கீழ் இருந்தால், மற்றும் பகுதி C ஆரம்ப தலையீடு சேவைகளுக்கான கட்டணத்தை கட்டுவதற்கு இந்த நிதி ஆதாரத்திற்கான அணுகலை நிராகரித்தால், அவர்களது குழந்தையின் IFSP-இல் அடையாளம் காணப்பட்ட அனைத்து பகுதி C சேவைகளும் எந்த கட்டணமும் இல்லாமல் வழங்கப்படும். கூடுதலாக, குடும்பத்தின் பணம் செலுத்தும் இயலாமை பகுதி C சேவைகளை வழங்குவதில் தாமதம் அல்லது மறுப்பை ஏற்படுத்தாது.

(f) குழந்தைகளுக்கான ஆப்பிள் ஹெல்த்/மெடிகெய்டு காப்பீடில் சேராத, மற்றும் வருமானம் மற்றும் செலவுத் தகவல்களை வழங்க மறுக்கும் குடும்பங்களுக்கு, அந்த சேவைகளுக்கான கட்டணத்தை செலுத்துவதற்காக பிற பொது ஆதாரங்களில் இருந்து பெறப்பட்ட எந்தவொரு தொகையையும் கருதிய பிறகு, குடும்ப அளவின் அடிப்படையில் மிக உயர்ந்த மட்ட மாதாந்திர கட்டணம் வசூலிக்கப்படும்.

(g) தங்கள் தனியார் உடல்நலப் பாதுகாப்பு/காப்பீட்டுக்கான அணுகலை மறுக்கும் மற்றும் வருமானம் மற்றும் செலவு தகவல்களை வழங்கிய குடும்பங்களுக்கு குடும்ப அளவு மற்றும் சரிசெய்யப்பட்ட ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் மாதாந்திர கட்டணம் வசூலிக்கப்படும்.

(h) குடும்ப அளவு, வருமானம் மற்றும்/அல்லது செலவுகளில் ஏதாவது மாற்றம் இருந்தால், குடும்பங்கள் தங்கள் மாதாந்திர கட்டணத்தை மறு நிர்ணயம் செய்யுமாறு கேட்கலாம். மறு நிர்ணயம் செய்யப்பட்ட பின்னரே மாதாந்திர கட்டணத்தில் எந்த மாற்றமும் ஏற்படும்.

(i) மாதாந்திர கட்டணத்தை செலுத்துவதில் 90 நாட்கள் தாமதித்து தவறு செய்த குடும்பங்கள், அவர்களது குழந்தைகளுக்காக பெறும் சேவைகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய கட்டணத் திட்டம் உருவாக்கப்படும் வரை குடும்ப செலவு பங்கேற்பு இடைநிறுத்தத்திற்கு உட்படும். குடும்பம், குடும்ப வள ஒருங்கிணைப்பாளர் மற்றும் சேவை வழங்குநர்(கள்) ஆகியோருக்கு எழுத்துப்பூர்வ அறிவிப்பு வழங்கப்பட்ட பின்னர் இது நடக்கும்.

### 14.B.10 நடைமுறை நலக்காப்பு தேவைகள்

(a) 34 CFR §303.521(e)-க்கு இணங்க, குடும்பங்களுக்கு கொடுப்பனவு மற்றும் கட்டணக் கொள்கையின் நகல் வழங்கப்படும், இது பின்வருவது தொடர்பான அவர்களது நடைமுறை நலக்காப்புகளை விவரிக்கும்:

   (1) கட்டணம் விதித்தல்;

   (2) பெற்றோரின் பணம் செலுத்தும் திறன் அல்லது இயலாமையை பற்றி மாநிலத்தின் நிரணயம்; மற்றும்

   (3) பொது அல்லது தனியார் காப்பீட்டுக்கான பில்லிங்.

(b) பெற்றோருக்கு பின்வரும் உரிமை உள்ளது:

   (1) 34 CFR §303.431-க்கு இணங்க மத்தியஸ்தம் செய்வதில் பங்கேற்பது

   (2) 34 CFR §303.436 அல்லது §303.441-இல் எது பொருந்துகிறதோ, அதன் கீழ் உரிய குற்றச்சாட்டு விசாரணையை கோருவது

   (3) 34 CFR §303.434 இன் கீழ் மாநில புகாரை பதிவு செய்வது மற்றும்/அல்லது

   (4) நிதி உரிமைகோரல்களை விரைவாக தீர்க்க மாநிலத்தால் நிறுவப்பட்ட வேறு எந்த நடைமுறையும்

(c) 34 CFR §303.521(e)(2)(i) -க்கு இணங்க, கோரும்போது அதன் கொடுப்பனவுகள் மற்றும் கட்டணக் கொள்கை அமைப்பின் எழுத்துப்பூர்வ நகலை ESIT வழங்குநர்கள் பெற்றோரிடம் கொடுப்பார்கள்:

   (1) ஆரம்பகால தலையீடு சேவைகளை வழங்குவதற்கான ஒப்புதல், தனிப்பயனாக்கப்பட்ட குடும்ப சேவை திட்டம் (IFSP) கூட்டத்தில் பெறப்படுகிறது; மற்றும்

   (2) பகுதி C சேவைகளுக்காக பணம் செலுத்த தனியார் காப்பீட்டை பயன்படுத்துவதற்கான ஒப்புதல்.